**சார்பு நீதிமன்றம், மேட்டூர்**
**முன்னிலை: திரு. எல். கமலக்கண்ணன், பி.எ., எம்.எல்.,**
**சார்பு நீதிபதி, மேட்டூர்**

**திருவள்ளுவராண்டு 2055, குரோதி ஆண்டு, மார்கழி திங்கள் 25 ஆம் நாள்**
**2025 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 09 ஆம் நாள் வியாழன்கிழமை**

**இ.ம.எண்.05/2024**
**in**
**இ.ம.எண். 03/2023**
**in**
**அ.வ.எண்.125/2022**

வெண்ணிலா ... மனுதாரர்/ பிரதிவாதி

/எதிராக/

1. பரமேஸ்வரி
2. கோகிலா
3. அழகுமுத்து ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு 07.02.2024 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 18.12.2024 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் / பிர்திவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. A.R. இளவரசன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K.V. ரங்கநாதன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

இ.ம.எண்.03/2023 மனுவில் கடந்த 08.11.2023 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து மேற்படி மனுவில் மனுதாரர் கட்சி செய்ய தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் விசாரணைமுறை சட்டம் கட்டளை 9 விதி 7 பிரிவு 151 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:**

எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தாவா சொத்துக்களை பொறுத்து பாகப் பிரிவினை மற்றும் தனிசுவாதீனம் கோரி மேற்படி தாவாவினை மனுதாரர் / பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்து மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச முதல்நிலை தீர்ப்பாணை பெற்று அதனடிப்படையில் இ.ம.எண். 03/2023 என்ற இறுதிநிலை தீர்ப்பாணை மனுவை தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர் இவ்வழக்கிற்கான அழைப்பாணையை பெற்றுக்கொண்டார். மனுதாரர், ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம், வடமுகம் வெள்ளோடு கிராமத்தில் குடியிருந்து வருகிறார். இவ்வழக்கு மேட்டூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் மனுதாரர் தனது வழக்கறிஞர் மூலம் ஆஜரானபோதும், மனுதாரருக்கு வைரஸ் காய்ச்சல் மற்றும் மஞ்சள் காமாலை நோய் தொற்றின் காரணமாக சிகிச்சை எடுத்து கொண்டதால், மனுதாரர் தரப்பு வழக்கறிஞரை தொடர்பு கொள்ள முடியவில்லை. எனவே கடந்த 18.02.2023 ம் தேதியன்று ஒருதலைப்பட்ச முதல்நிலை தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. பின்பு எதிர்மனுதாரர்கள் I.A. 3/2023 என்ற இறுதிநிலை தீர்ப்பாணை மனு தாக்கல் செய்து ஆணையர் நியமனம் செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு ஆணையர் தாவா சொத்தை 25.11.2023 ம் தேதி அளவீடு செய்ய இருப்பதாக மனுதாரருக்கு அறிவிப்பு கொடுத்தார். அதன்பிறகு மனுதாரர் அவரது வழக்கறிஞரை தொடர்பு கொண்டு கேட்டபோது நீதிமன்றத்தில் மனுதாரரின் ஆஜரின்மையால் ஒருதலைபட்ச முதல்நிலை தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதாக வழக்கறிஞர் கூறினார். மேற்படி வழக்கில் மனுதாரருக்கு நல்ல எதிர்வாதம் உள்ளது. மனுதாரரின் தந்தை கடந்த 16.04.2019 ம் தேதியன்று ஒரு உயில் ஆவணத்தை இரண்டு சாட்சிகள் முன்னிலையில் எழுதி வைத்துள்ளார். அதுவே இறுதியான உயில் ஆவணம் ஆகும்.

மனுதாரரின் தந்தை கடந்த 23.04.2021ம் தேதி இறந்தபிறகு உயில் சாசனம் நடைமுறைக்கு வந்து, அதில் மனுதாரரின் தந்தை மற்றும் சகோதரனின் பங்கில் மனுதாரருக்கும் உரிமை உள்ளது. ஆனால் மனுதாரரின் உரிமையை மறைத்து இவ்வழக்கு எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 16.04.2019ம் தேதி மனுதாரரின் தகப்பனார் மனுதாரருக்கு ஆதரவாக உயில் ஆவணம் எழுதி வைத்த விவரம் எதிர்மனுதாரர்களுக்கு தெரியும். வழக்குரையில் குறிப்பிட்டுள்ளவாறு பங்கு எதிர்மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல. இறுதிநிலை தீர்ப்பாணை மனுவிலும் மனுதாரர் கடந்த 15.11.2023ம் தேதி தோன்றாத்தரப்பினராகியுள்ளார். எனவே மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு வழங்குவதி அவசியமானதாகும். இம்மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும். எனவே இ.ம.எண். 03/2023 மனுவில் கடந்த 08.11.2023ம் தேதியன்று மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 1ம்எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்களால் ஏற்று கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:**

மனு பொய்யானது, மோசடியானது, சட்டவலிவற்றது எதிர்மனுதாரர்களை ஏமாற்றும் நோக்குடன் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டதாகும். எதிருரை மூலம் எதிர்மனுதாரர் வியக்தமாய் ஒப்பு கொள்ளும் சங்கதிகளை தவிர ஏனைய சங்கதிகளை மனுதாரரே ருசுப்படுத்த வேண்டும். மனுதாரருக்கு எதிராக கடந்த 18.02.2023ம் தேதியன்று நீதிமன்றம் பிறப்பித்த ஒருதலைபட்ச முதல்நிலை தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்திட வேண்டியும் அதற்கு 274 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுவிட்டதாகவும் பொய்யான சங்கதிகளை முன்னிறுத்தி

இம்மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் மனுதாரர் நீதிமன்ற அழைப்பாணையை பெற்று கொண்டு கடந்த 16.06.2022ம் தேதியன்று வழக்கறிஞர் அமர்த்தியும் அதன்பின்னர் 03.08.2022, 27.08.2022, 19.10.2022, 15.11.2022 ஆகிய தேதிகளில் சுமார் 90 நாட்களுக்கு மேல் வாய்ப்பு வழங்கியும் மனுதாரர் பதிலுரையை தாக்கல் செய்யாததால் 18.02.2023ம் தேதி ஒருதலைபட்ச முதல்நிலை தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. மேற்படி தீர்ப்பாணையின் அடிப்படையில் எதிர்மனுதாரர்கள் இ.ம.எண். 3/2023 என்ற இறுதிநிலை தீர்ப்பாணைக்கான மனுவை தாக்கல் செய்தார்கள். மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணை மனுவில் மனுதாரர் அறிவிப்பு பெற்றுக் கொண்டு ஆஜராகாத காரணத்தால் 15.11.2023ம் தேதியன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தற்போது 274 நாட்கள் காலதாமதம் என்று சரியான காலத்தை கணக்கிடாமலும், மேற்படி மனுக்கள் தாக்கல் செய்திட மஞ்சள் காமாலை அதனுடன் இணைந்த காய்ச்சல் என்ற ஒற்றை காரணத்தை குறிப்பிட்டு அதற்கு ஆதரவாக எந்த அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ சான்றிதழும் இணைக்காமலும் மற்றும் மனுதாரர் / பிரதிவாதியானவர் சிகிச்சை எடுத்துக் கொண்ட விவரம் மற்றும் காலத்தைக் கூட குறிப்பிடாமலும் இறுதிநிலை தீர்ப்பாணை நீதிமன்ற ஆனையர் மனு நடவடிக்கைகளை நிறைவேற்றிட வேண்டி அனுப்பிய தபால்களை மனுதாரர் பெற்றுக் கொண்டதை ஒப்புக்கொண்டும் தாவா சொத்தில் இறுதிநிலை தீர்ப்பாணை நடவடிக்கைகளை நிறைவேற்ற விடாமலே நீதிமன்ற ஆனையரை தடுக்க பெரும் முயற்சி செய்துவிட்டு தற்போது பொய்யான காரணத்தை முன்னிறுத்தி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவு செய்ய வேண்டும்.

4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு

அனுமதிக்கத்தக்கதா இல்லையா? என்பதே ஆகும்.

5. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. இருதரப்பு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தனக்கு உடல்நிலை சரியில்லாமல் சிகிச்சை எடுத்து கொண்டதால் தன்னால் வழக்கறிஞரை சந்தித்து வழக்கு குறித்த விவரம் கேட்க முடியவில்லை என்றும் அதனால் தன்னால் நீதிமன்றத்தில் பதிலுரை தாக்கல் செய்யாத நிலையில் தான் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டு தனக்கு எதிராக ஒருதலைபட்ச முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தனக்கு இவ்வழக்கில் நல்ல கட்சி உள்ளது என்றும் தனது தகப்பனார் தனக்கு ஆதரவாக உயில் எழுதி வைத்துள்ளார் என்றும் மனுதாரர் தரப்பில் குறிப்பிட்டுள்ள நிலையில் மேற்படி விவரங்களை மறுத்தும் மனுதாரர் மருத்துவ சிகிச்சை எடுத்து கொண்டதற்கான ஆவணங்கள் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் மேலும் இறுதி நிலை தீர்ப்பாணை மனுவும் மனுதாரருக்கு சார்வு செய்யப்பட்டுள்ள நிலையில் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ள விவரம் மனுதாரருக்கு அப்போதே தெரிந்துள்ள நிலையில் உடனடியாக மேற்படி தீர்ப்பாணையை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்தி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்று எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனை ஏற்று கொள்ளும்படி இருந்தாலும் மனுதாரர் தனது கட்சியை எடுத்துரைக்க ஒரு வாய்ப்பு வழங்கும் வகையில் இம்மனுவை செலவு தொகையுடன் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறே இம்மனுவிற்கு தீர்வு காணப்படுகிறது. மேலும் மேற்படி மனுவில் இந்த மனுதாரர் கடந்த 12.10.2023 ம் தேதியன்று தோன்றாத்தரப்பினராக்கப்பட்டுள்ளார். ஆனால் இம்மனுவில் தவறாக 08.11.2023 ம் தேதியன்று தோன்றாத்

தரப்பினராக்கப்பட்டதாக தவறாக குறிப்பிட்டுள்ளார். மேற்படி தவறு குறித்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கவில்லை. எனவே மேற்படி தவறு கைதவறுதலாக கணினியச்சு பிழை ஏற்பட்டிருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே 12.10.2023 ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய இம்மனு தாக்கல் செய்திருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

6. முடிவாக, இம்மனு செலவு தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் செலவுத் தொகையாக எதிர்மனுதாரருக்கு ரூபாய் 1,000/−த்தை 29.01.2025 ம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும் தவறும் பட்சத்தில் இம்மனு தாமாகவே தள்ளுபடியாகிவிடும். அழைக்க 29.01.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ம் ஆண்டு ஜனவரி மாதம் 09 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

L KAMALAKANNAN Digitally signed by L KAMALAKANNAN Date: 2025.01.09 18:33:12 +0530

**சார்புநீதிபதி,**
**மேட்டூர்**

**மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணம்:**

இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணம்:**

இல்லை

L KAMALAKANNAN Digitally signed by L KAMALAKANNAN Date: 2025.01.09 18:33:17 +0530

**சார்பு நீதிபதி,**
**மேட்டூர்**